39 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 29-4-33

மோட்டார்-ரயில் போட்டி



—*Courtesy of "Hindustan Times"*

என்ன ஆச்சரியம்! மோட்டார்கள் ரயில்வேக்களை தூக்கி எறிந்து விட்டனவாம்! எங்கு பார்த்தாலும் ஆட்களையும் சாமான்களையும் தூக்கிக் கொண்டு மோட்டார்கள் ஓடத் துவக்கி விட்டதால் ரயில்வேக்களுக்கு பலத்த நஷ்ட மேற்பட்டு விட்டதாம். இந்தப் போட்டா போட்டி தாங்க முடியாது போகவே இதைத் தீர்க்க மண்டை பெருத்த மேதாவிகள் ஸிம்லாவில் மகாநாடு கூடிப்பேச வேண்டியதாகி விட்டது. சில்லறை மோட்டார் வண்டிக்கு என்ன சாமர்த்தியம் பார்த்தீர்களா?

ரயில் மோட்டார் லடாய்

மோட்டார் வண்டி வந்து கட்டை வண்டியையும் மாட்டு வண்டியையும் தொலைத்து விட்டது. இப்போது மோட்டாரினால் ரயில்வேக்களுக்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டதாம். ரயில்வே லயன்களுக்குப் பக்கத்திலேயே மோட்டார் சாலைகளும் இருப்பதால் போட்டா போட்டி பலமாகி ரயில்வேயின் வருமானத்தில் பொத்தல் விழும்படி செய்து விட்டதாம்.

இந்தப் போட்டா போட்டியை நிறுத்துவதற்காக ஸிம்லாவில் ஒரு மகாநாடு நடந்தது. அந்த மகா நாட்டுக்கு வைஸ்ராய் உள்பட அநேக அதிகாரிகள் வந்திருந்தனர். மோட்டார் போக்கு வரத்தினால் ரயில்வேக்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களைப் பற்றி அநேக அதிகாரிகள் பிரமாதமாகப் பேசினார்கள். சுமார் 800 கோடி ரூபாய் மூலதனத்தைக் கொட்டி நடத்தப்படும் ரயில்வேக்கள் நஷ்டமடைய லாகாதென்று அநேகர் பேசினார்கள். ரயிலும் மோட்டாரும் போட்டி போட்டு ஒன்றையொன்று கெடுத்துக் கொள்ளலாகாதென்று சொன்னார்கள்.

பல விடங்களில் சாமான்கள் தூக்கிச் செல்வதற்கும், பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்குமென்று அநேக லாரிகளும் பஸ்ஸுகளும் ஓடிக் கொண்டிருக்கின்றன. சுமார் 45 ஆயிரம் பஸ்ஸுகள் ஓடுவதாகக் கணக்கெடுக்கப் பட்டுளது. அவைகளை வாங்க 20 கோடி ரூபாயாவது செலவாயிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. மோட்டார் வைத்துக் கொண்டிருக்கும் சில்லரை முதலாளிகளின் வயிற்றில் அடிக்குமாறு ரயில்வே நிர்வாகங்களைத் தலைகொழுக்க விடலாகாது. எத்தனை பஸ் டிரைவர்கள்! எத்தனை கண்டக்டர்கள்! அந்த ஏழைகளையும் கவனிக்க வேண்டுமென்று ஞாபகப்படுத்துகின்றோம்.

மோட்டார் ஓடினாலென்ன? ரயில் ஓடினாலென்ன? பொது ஜனங்கள் வேண்டுவது சவுகர்யம்! அந்த சவுகர்யத்தைப் பற்றியாவது, பிரயாண சார்ஜ் குறைப்பதைப் பற்றியாவது. இந்த மகாநாட்டில் ரயில்வே அதிகாரிகளோ, மோட்டார்காரர்களின் பிரதிநிதிகளென்று சொல்லிக் கொண்டவர்களோ கவனித்ததாகத் தெரியவில்லை. ரயிலுக்கும் மோட்டாருக்கும் ஏற்பட்டுள்ள லடாய் எப்படிப் போவதாயினும் நமக்கு துளியாவது சவுகர்ய மேற்படுமாவென்று தான் பொது ஜனங்கள் கவனிப்பர்.

பணப் பெட்டி யாரிடம்?

இந்திய அரசாங்கத்தின் பணப் பெட்டி இந்தியர்கள் கைக்கு வராத வரையில் எத்தகைய அரசியல் திட்டத்தையும் இந்தியர் ஏற்றுக் கொள்ள' மாட்டார்கள். வெள்ளைக் கடுதாசித் திட்டத்தின்படி பார்க்கப் போனால் 'பொருளாதார நிபுணர்' என்ற ஒரு பெரிய உத்தியோகஸ்தரை நியமித்து இந்தியாவின் பணப் பெட்டியை அவரிடம் ஒப்படைத்து விடுவதென்று சர்க்கார் யோசனை செய்திருப்பதாகத் தெரிய வந்தது. யாதொரு சக்தியுமின்றி வெறும் பொம்மைகள் போல ராஜாங்க சபையிலும், சட்ட சபையிலும் 'பிரதிநிதிகள்' குந்திக் கிடக்க வேண்டுமென்றும் செல்வ விவகாரங்களெல்லாம் அந்த நிபுணர் கையிலேயே இருக்குமென்றும் தெரிகிறது. இந்திய ஏழைகளிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப் பணத்தின்மீது இந்தியனுக்கு அதிகார மிருக்கப் போவதில்லையென்றால் அந்த அரசியலை சுயமரியாதையுடைய யாராவது தொட விரும்புவானா?

இன்று ஸிம்லாவினின்று கிடைத்துள்ள வதந்தி உண்மையானால் பூர்வாங்கமான சூழ்ச்சிகளை மத்திய சர்க்கார் ஆரம்பித்து விட்டதென்றே சொல்லலாம். இந்திய துரைத்தன போக்கிஷ இலாகாவில் முக்கியமான பதவிகளில் இருக்கும் இந்தியர்களைக் கோஞ்சம் கோஞ்சமாகக் குறைத்து விட முயற்சி செய்யப்படுகின்றதாம். தற்போது போக்கிஷ இலாகாவில் உதவிக் காரியதரிசி பதவியிலுள்ள இந்தியருக்குப் பின்பு ஓர் பக்கா ஐரோப்பியரை நியமிக்கப் போவதாகவும் வதந்தி கூறுகிறது. இந்த வதந்திகள் உண்மையா?

விழுந்தடித்துக் கொண்டு சீமைக்கு ஓடும் சிகாமணிகள் இந்த வதந்தியைப் பற்றி விசாரித்து விட்டுப் போகட்டும். தாங்கள் நினைத்தபடியே பிரிட்டிஷார் செய்து தீர்ப்பதென்று நினைத்திருப்பார்களானால் இங்கிருந்து ஆயிரம் பேர் யாத்திரை போனாலும் ஒன்றும் பலிக்காது. ஆகவே, கொஞ்சமாவது அறிவிருந்தால் தங்கள் பிரயாணம் வீண் தானென்பதை உணர்ந்து கொண்டு இந்தப் பிரகஸ்பதிகள் நின்று விட வேண்டுமன்றோ! பண அதிகாரமில்லாமல் சமஷ்டியாவது? மண்ணாங்கட்டியாவது?

தண்ணீர் பட்ட பாடு!

(திப்பு எழுதியது)

சுத்த ஜலத்தின் மேன்மையைப் பற்றி வைத்தியர்கள் மிகவும் புகழ்கின்றார்கள். எந்த வியாதியையும் ஜல வைத்தியத்தினால் போக்கி விடலாமென வர்ணிக்கிறார்கள். தண்ணீருக்கு ஆரோக்கிய மூட்டும் குணங்களுண்டு என்பதை நானும் ஒத்துக் கொள்கின்றேன். ஆனால் என் வீட்டில் பால் வார்க்கும் பால்காரன் இருக்கின்றானே, அவன் தாராளமாகத் தண்ணீர் சேர்க்காமல் பால் தருவதே யில்லை. என்னுடைய ஆரோக்கியமானது விர்த்தி யடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் அவன் தண்ணீரைச் சேர்த்துப் பால் வார்க்கின்றானா என்ன? என்னுடைய தேக நலத்தை உத்தேசித்து தயிரில் இன்னும் கொஞ்சம் தண்ணீரைச் சேர்த்துத் தருவதாக எங்கள் வீட்டுத் தயிர்க்காரி சொன்னாளானால் அவளை என்னால் நம்ப முடியுமா?

அந்த மாதிரிதான் இருக்கிறது பிரிட்டிஷ் அதிகாரிகளின் போக்கும். இந்திய ஜனங்களுடைய நலத்தை உத்தேசித்து சீமையில் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி நடத்துகின்றார்களாம். பால்காரனுக்கு எனது ஆரோக்கியத்தின் மீது எவ்வளவு அக்கரையோ, அவ்வளவு அக்கரை பிரிட்டிஷ் ராஜீய வாதிகளுக்கு இந்திய ஜனங்களின் மீது ஏற்பட்டிருக்கிறது. பால்காரன் ஆரோக்கிய வஸ்துவாகிய தண்ணீரைத் தாராளமாகச் சேர்க்கின்றான். பிரிட்டிஷ் ராஜீய வாதி கமிட்டி மேல் கமிட்டி நடத்தி இந்தியாவுக்கு புதிய அரசியலை சிருட்டித்துக் கொண்டிருக்கின்றான்.

கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியாம்! அது கூட்டா யிருந்தாலென்ன? குழம்பா யிருந்தாலென்ன? பலன் என்னமோ ஒன்றேதான். ஆனால் இந்தக் கமிட்டியைப் பற்றி பிரமாதமாகச் சிலர் புகழ்ந்து கொள்கிறார்கள். யாரப்பா அது? அந்தக் கமிட்டிக்கு யார் யார் போய்க் கொண்டிருக்கிறார்களோ, அவர்களெல்லாம் அதைப் பற்றி பிரமாதமாகப் புகழ்ந்து பேசுகிறார்கள். சீமைக்குப் போக வர கப்பற் செலவு, வழியில் தினிச் செலவு, சீமையில் தங்கி யிருக்க கைக் காசு, சிகரட் பணம் உள்பட எல்லாம் கொடுப்பதா யிருந்தால், அந்த மகா கமிட்டியைப் பற்றி யார்தான் புகழ மாட்டார்கள்?

இந்தக் கமிட்டிக்கு ஆள் பொறுக்கப்பட்டதைக் குறித்து சில பத்திரிகைகள் பெருமை பாராட்டிக் கொள்கின்றன. "அழைக்கப்பட்டுள்ள 27 பேர்களில் 7 பேர் பம்பாய் மாகாணத்தினின்று அழைக்கப்பட்டிருப்பது நமது மாகாணத்துக்குக் கவுரவ மன்றோ!" என்று பம்பாய் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகையான 'டைம்ஸ் ஆப் இந்தியா' எழுதிற்று. "நாங்களும் சப்பை யல்ல. எங்கள் மாகாணத்தினின்று ஐந்து பேர் அழைக்கப்பட்டிருப்பது எங்கட்கு கௌரவம்" என்று சென்னை ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகையான 'மதராஸ் மெயில்' கருதுகிறது. சபாஷ்! இந்த உதவாக்கரைக் கமிட்டிக்கு ஆள் சேர்க்கப்படுவதில் மாகாணங்களுக்குள் போட்டா போட்டி வேறு வேண்டுமா? இந்த அடாசுக் கமிட்டில் அங்கத்தினர்களை அதிகமாகப் பெறுவது அவமானமென்பதைப் பற்றி யாரும் யோசிக்கவே யில்லை போலும்!

"எனக்கென்ன? வருடந்தோறும் ஏழெட்டு சிராத்தம் நான் செய்கின்றேன். வடை, அதிரசம், எள்ளுருண்டை எல்லாம் அடிக்கடி கிடைத்துக் கொண்டிருக்கிறது" என்று ஓர் அந்தணப் பையன் சந்தோஷப்பட்டானும். குடும்பத்தில் பல பெயர்கள் உருண்டு போனதைப் பற்றி பையன் துளியும் வருந்தாமல் கிடைக்கும் அதிரஸத்தைக் கணக்குப் பார்த்து சந்தோஷப்படுவது நியாயமாகுமா? பார்லிமெண்டு கமிட்டியில் அதிக ஸ்தானம் கிடைத்ததென்று ஒரு மாகாணம் சந்தோஷப்படுவது பையன் அதிரஸம் தின்று சந்தோஷப்படுவது போலிருக்கிறது.

இரண்டு வீட்டுக்காரர்கள் தங்கள் வீட்டுக் கிணற்றுத் தண்ணீரின் மேன்மையைப் பற்றி போட்டி போட்டுப் பேசிக் கொண்டார்கள். "என் வீட்டுக் கிணற்றுத் தண்ணீர்தான் உப்புத் தண்ணீர்" என்றானும் ஒருவன். "இல்லையில்லை. உன் வீட்டுக் கிணற்று உப்பை விட என் வீட்டுத் தண்ணீரின் உப்பு எவ்வளவோ ஜாஸ்தி" என்று அடுத்த வீட்டுக்காரன் போட்டி யிட்டானும். அந்த மாதிரி தானிருக்கிறது 'டைம்ஸ் ஆப் இந்தியா'வும், 'மதராஸ் மெயி'லும் பேசிக்கொள்ளும் தோரணை. இந்த உபயோகமற்ற கமிட்டியில் அதிக ஸ்தானங்கள் கிடைப்பது மாகாணத்துக்கு கவுரவமா, வெட்கமா வென்பது பற்றி இந்த ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகள் கவலைப்படுமா?

வாலுக்கு வால் முளைத்தது!

கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி. சீமைப் பேர்வழிகளடங்கியது. அதில் சாக்ஷியம் கூறுவதற்கென 28 இந்தியர்களை அரசாங்கம் அழைத்தது. அந்த 'வால் கமிட்டியி'னரில் அநேகர் புறப்பட்டு விட்டனர். இப்போது அந்த வால் கமிட்டிக்கு ஓர் வால் முளைத்திருக்கிறது. இந்திய ரயில்வே விஷயங்களையும், பாங்க் விஷயங்களையும் பற்றி சாக்ஷியம் கொடுப்பதற்கென்று ஒரு தனிக் கூட்டம் வேண்டுமோம்! அதற்காக இந்திய சட்ட சபையிலிருந்து பொறுக்கப்பட்ட ஓர் கூட்டம் போகப் போகின்றது.

மிஸ்டர் பெந்தால், ஸ்ரீ ரங்கையர், ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியார், ஏ. ராமசாமி முதலியார், மகமத் யாகூப், முதலியவர்கள் இந்த வால் கமிட்டியில் பிரதானமானவர்கள். ரங்கையரும் ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியாரும் பொறுக்கி யெடுக்கப்பட்டதற்குக் காரணமென்னவோ தெரியவில்லை. ஒருவர் சீர்திருத்தக்காரர். இன்னொருவர் பழுத்த ஸநாதனி! 'பாப'த்தையும் பொருட்படுத்தாமல் கப்பலேறுவதற்கு அவர் துணிந்து விட்டார் போலும்! இந்த இருவரையும் லண்டன் 'ஹைட்பார்க்' கூட்டத்தில் வாய்ச் சண்டை போடச் செய்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்பது சில அதிகாரிகளின் அந்தரங்க ஆசை போலும்! நிற்க,

இந்த இரண்டு கூட்டத்தோடு இன்னொரு கூட்டமும் சீமைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் அழையாத சம்பந்திகள். தாங்களாகவே போய் ஏதாவது பேசி விட்டு வருவதென்று தீர்மானித்துப் புறப்பட்டிருக்கின்றார்களாம். சென்னையிலிருந்து கோபதி நாராயணசாமி செட்டி, வங்காளத்திலிருந்து பானர்ஜி, பஞ்சாபினின்று பாய் பரமானந்தர் இவர்கள் சொந்த ஹோதாவில் போய் சாக்ஷியம் கொடுப்பார்களாம்.

யார் போனாலென்ன? வருவது வரத்தான் போகிறது. எத்தனை பேர் போனாலும் ஒன்றும் பலனில்லையென்பதை அனைவரும் அறிந்திருந்தும், இந்த பிரகஸ்பதிகள் தங்கள் கைக் காசை இப்படி வியர்த்தமாக்க வேண்டுமோ?

பொறுக்கிய வம்புகள்

(தூம்தடாகா எழுதுகிறான்)

விளம்பர சக்தி

சென்னையிலொரு பத்திரிகை "தாகூர் ஜர்மனியில் கைது செய்யப்பட்டார்" என்று போஸ்டர் விளம்பரம் போட்டது. "எந்தத் தாகூர்?" என்று பலர் அறிய ஆவலுற்றனர். பத்திரிகை ஏராளமாக விற்றது. கடைசியில் விஷயத்தைப் பார்த்தால் ஜர்மனியில் தாகூர் என்று பெயருடைய யாரோ ஒரு இந்திய இளைஞர் அவரது பொதுவுடமைக் கொள்கைக்காகக் கைது செய்யப்பட்டதாகத் தெரிய வந்தது. பத்திரிகைத் தொழிலில் 'போஸ்டருக்'குள்ள சக்தி அன்றைக்குத் தெரிந்தது.

கோபுரத்துப் பொம்மை

"இந்தியா என்ற மத்தியக் கல் விலகி விட்டதானால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்ற 'கமான்' இடிந்து விழுந்துவிடும். ஆகவே ஜனநாயக அரசியலை இந்தியாவுக்குத் தந்து இந்தியர்களைக் கெடுத்து விடாதீர்கள்." என்று பேஜ் கிராப்ட் என்பான் லண்டனில் பேசி யிருக்கிறான். ஏகாதிபத்தியம் என்ற வளைவுக் கட்டிடம் இடிந்து விழவேண்டிய காலம் வந்து விட்டதானால் கட்டாயமாய் இடிந்து தான் போகும். "கோபுரத்தைப் பொம்மை தாங்குகிறதா?" என்பது போல இந்த ஒரு பேஜ் கிராப்டினால் ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியைத் தடுக்க முடியுமா?

"கில்லாப் பிரண்டி கீப்பரண்டி."

மதராஸ் கார்ப்பொரேஷன் மேயர் சிறு வயதுக்காரர். ஆகவே அவர் எங்கே போனாலும் தமது இளமையைப் பற்றித் தம்பட்ட மடித்துக்கொண்டு அலைகிறார். கார்ப்பொரேஷன் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் முன்னே அவர் பேசும்போது, "உங்களுக்கு வயது மேலும் மேலும் ஆனபோதிலும் பால்யம் திரும்புவதாகவே எண்ணிக் கொண்டிருங்கள்" என்று கூறினார். சரி, இனி அடுத்த வருடத்தில் கார்ப்பொரேஷன் உபாத்தியாயர்கள் தங்கள் வகுப்புப் பையன்களோடு "கில்லாப் பிரண்டி கீப்பரண்டி" ஆடினால் வெகு ஷோக்கா யிருக்கும். மேயரின் உத்தரவுப்படி நடந்ததாகவும் ஆகும்.

இந்தியாவின் வீர புத்திரிகள்

(எல்லன் வில்கின்ஸன்)

காந்தியடிகளின் பண்டை ஆசார அநுஷ்டானங்களும், அவரது முழத் துண்டும், ரிஷியைப் போன்ற வாழ்க்கையும் இந்திய ஸ்திரீகளின் மனதை வசிகரித்து விட்டன. மேற்கு நாட்டு ஸ்திரீகளைப் போல தலை மயிரைக் கத்தரித்துக் கொள்ளும் வழக்கம் இந்தியாவில் நுழைந்து விட்டது. ஆனால் காந்தியடிகளின் உபதேசம் காரணமாக அந்த வழக்கம் பரவாது நின்று போய் விட்டது. இந்தியாவில் நான் 12 ஆயிரம் மைல் பிரயாணம் செய்தேன். தலையைக் கத்தரித்துக் கொண்ட ஒரே ஒரு பெண்மணியைத்தான் நான் பார்த்தேன்.

50 வருட காலமாக பெண்ணுக்கு சுதந்திரம் தர வேண்டு மென்று இந்திய ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் அலறிக் கொண்டிருந்தனர். ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால் பத்தே வருஷத்தில் காந்திஜி இந்தியப் பெண்களின் அடிமை வாழ்வு அகலுமாறு செய்து விட்டார். அவருடைய உத்தரவின் கீழ் சுமார் ஆயிரத்து அறுநூறு பெண்கள் மறியல் செய்து சிறைக் கோட்டமும் அடைந்தனரென்றால் அவரது சக்தியை என்னென்பது? இந்திய விடுதலைக்குப் பாடுபடும் 'தேச சேவிகை' என்பதற்கு அடையாளமாக அந்த ஸ்திரீகள் காஷாய வர்ணச் சேலையை அணிகின்றனர்.

ஆனால் பெண்மைக்கு இன்றியமையாத லக்ஷணங்களை ஒருவளாவது விட்டு விடவில்லை. அழகாகக் கொண்டையில் புஷ்ப மணிகின்றார்கள். மூக்கில் மூக்குத்தி உண்டு. இந்தியக் காவியங்களில் பெண்களின் லக்ஷணங்கள் எப்படிச் சொல்லப் பட்டிருக்கிறதோ அவ்வாறே இந்தப் பெண்மணிகள் ஆடையணிந்திருப்பதோடு சிறை போன்ற துயரங்களை அநுபவிக்கவும் துணிந்திருக்கிறார்கள்.

வடக்கே ஒரு சர்வ கலாசாலையில் சமுஸ்கிருத பண்டிதையா யிருந்த ஒரு ஸ்திரீ காங்கிரஸ் ஸர்வாதிகாரியாக வேலை பார்த்ததுண்டு. இந்த ஸ்திரீகளெல்லாம் ராஜீயத்திற்கு வேலை செய்வதானால் நாட்டை ஆளும் ஆண் மக்கள் தயக்கமுற வேண்டியது தானென்று மிஸ்டர் மாட்டர்ஸ் என்னிடம் கூறினர்.

ஸ்திரீகளை காங்கிரஸ் ஸர்வாதிகாரிகளாக்குவதும் அவர்களின் கீழ் தொண்டர்கள் வேலை செய்வதும் காங்கிரஸ் இயக்கத்தில் ஸர்வ சாதாரணமாகி விட்டது. இந்த உத்தியோகம் ஒரு பெண்ணுக்குக் கிடைத்த வுடன் 'சிறை' அவளுக்குக் காத்துக்கொண் டிருப்பதென்னவோ வாஸ்தவம்.

ஆனால் அதே சமயத்தில் இந்தியாவில் எழுத்து வாசனை யின்றி பல்லாயிரக் கணக்கான பெண்மணிகள் கிராமங்களில் இருந்து வருகின்றனர். ஆனால் அவர்களனைவரும் இந்தியாவின் தற்கால வீரப் பெண்மணிகளைப் பற்றிய கதைகளைக் கேள்விப் பட்டிருக்கின்றனர். பெண்டாட்டியைக் கடுமையாக நடத்துபவன் காங்கிரஸ்காரனாகி விடுவதுண்டு; பெண்கள் விடுதலையைப் பற்றி பேசுவோனாகவும் மாறி விடுவதுண்டு.

ஏனெனில் அவன் கண் முன்னே மகாத்மாவின் மனைவி, சரோஜினி தேவி, பண்டித நேருவின் வீர பத்தினி முதலிய பெண் உருவங்கள் நிற்கின்றனரல்லவா? நேரு குடும்பத்தைச் சேர்ந்த நாட்டுப் பெண்கள்கூட சிறைக்கோட்டமடைந்துளர். ஆகவே அந்தப் புனிதப் பெண்களின் படங்கள் அநேக குடிசைகளின் சுவர்களில் கூட மாட்டப் பட்டிருப்பதைக் கண்டேன்.

இப்போது இந்திய ஸ்திரீகளுக்குள் வீரப் போட்டி வந்திருப்பதையும் நான் கண்டேன். "கமலா நேரு அதைப் பண்ணுவாளானால் நான் ஏன் அதைச் செய்யலாகாது?" என்று சில பெண்மணிகள் முணு முணுப்பதுண்டு.

—'அட்வான்ஸ்' பத்திரிகை.

வித்வான்கள் தூக்கம்

மலையாள பாஷையின் வளர்ச்சிக்காக கள்ளிக் கோட்டையில் பண்டிதர்கள் மகாநாடொன்று நடந்தது. தெலுங்கு பாஷைப் பத்திரிகைக்காரர்களும் ஆசிரியர்களும் பெஜவாடாவில் கூடி பாஷாபிவிர்த்திக்கான வழிகளைப் பற்றி போன வாரத்தில் பேசினார்கள். ஹிந்தி பாஷைக் கவிகளின் மகாநாடொன்று சென்னையில் நடந்தது. ஆனால் தமிழர்கள் இத்தனையையும் பார்த்துக்கொண்டு சும்மா விருக்கின்றனர். தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியைப் பற்றியோ, தமிழில் கவிதை முன்னேற வேண்டுமென்பது பற்றியோ எவருக்கும் கவலை யில்லை. "தமிழ்ப் பாஷை கடவுளால் படைக்கப்பட்டது. மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான். நமக்கேன் கவலை?" என்று ஒவ்வொரு தமிழ் 'வித்வானு'ம் சொல்லி விட்டு குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கின்றார் போலும்!

எப்ரல் நாய்களா?

பைத்தியம் பிடித்த நாய்களினால் பொது ஜனங்களுக்கு ஆபத்து வருமெனக் கருதி எப்ரல் மாதத்தில் தெரு நாய்களை அடித்துப் போடுவது வழக்கம். இது "எப்ரல் மாதத்தில் நாய் அடிபடுவது போல்" என்று வழக்குச் சொல்லாகக் கூட அமைந்து விட்டது. இப்பொழுது கிஸ்தி செலுத்த முடியாது தவித்துக் கொண்டிருக்கும் தஞ்சை மிராசுதார்களின் நிலைமை, எப்ரல் மாதத்திய நாயை விடக் கேடு கெட்ட நிலையில் தான் இருக்கிறது.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளக் குறைவு உயர்த்தப்பட்டு விட்டது. ஆனால் மிராசுதார்கள் நெல்லை அனுப்பச் சவுகர்யமாக ரயில்வேக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்ற தீர்மானம் தூங்கிப்போய் விட்டது. இலங்கை கவர்ன்மெண்டும், தென்னிந்திய ரயில்வே கம்பெனியும் கட்டணத்தைத் தேவையான அளவுக்குக் குறைக்கவில்லை. நெல்லை விற்பதற்கு வழியன்னியில் மிராசுதார்கள் தவிக்கின்றனர். சர்க்கார் தயவு தாக்ஷண்ய மன்னியில் இரகஸிய சுற்றறிக்கைகள் விட்டு மிராசுதார்களை நசுக்குகின்றனராம். தாசில்தார்களும், ஸ்தல அதிகாரிகளும் மும்முரமாக தங்கள் வேலைகளில் ஈடுபட்டு மிராசுதார்களை நசுக்கி வருகின்றனராம். விதைக்கு வைக்கப்பட்டிருக்கும் நெல்லையும், நிலங்களையும் கூசாமல் ஜப்தி செய்கின்றார்களாம் இதற்கு நன்னிலம் தாசில்தார் உதாரண புருஷராக விளங்கி வழி காட்டி வருகின்றாராம். இது விஷயத்தில் சர்க்கார் அசட்டையாக இருப்பாரானால் ஏழை குடியானவனின் கிளர்ச்சிக்கும், ஆத்திரத்துக்கும் பிறகு பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்பதில் சந்தேகமா? —'ஸ்வராஜ்யா.'

தொழிலாளர் குரல்

"சீமையில் உள்ள வெள்ளை மாளிகையினின்று வெளி வரும் அரசியல் திட்டத்தை ஒரு போதும் இந்தியா ஏற்றுக் கொள்ளாது. ஆகவே காந்திஜியை விடுதலை செய்து காங்கிரஸின் உதவியைக் கவர்ன்மெண்டு தேடுவது தான் சிறந்த வழி'' என்று ஸ்ரீயுத ருய்க்கர் என்ற தொழிலாளர் சங்கத் தலைவர் நாகபுரியில் பேசி யிருக்கின்றார்.

பசியாத வரம்

நம் நாடு வியவசாய தேசம். விவசாய சம்பந்தமாக முன்னேற்றமடைய கலாசாலைகள் இருப்பது நல்லது தான். ஆனால் அது எவ்வளவு சிக்கனமாக இருக்கவேண்டுமோ அதைக் கற்பிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். சாதாரண ஒரு ஏழை குடியானவனின் தரத்துக்கு மேல்பட்டதாக இருக்கக் கூடாது. சமீபத்தில் பூனாவிலுள்ள விவசாய காலேஜைப் பற்றி சர்க்காரின் அறிக்கையைப் பார்த்ததால், "பழையது இருந்தால் போடு, பசியாத வரந் தருகிறேன்" என்ற கதையாக இருக்கிறது. சர்க்கார் வறுமையைப் போக்கிக் கொள்ள மாணவர்களை நம்பியிருக்கின்றது போலும். பம்பாய் மாகாண மாணவர்களுக்கு 120 லிருந்து 150 ரூபா யாகவும், வெளி மாகாண மாணவர்களுக்கு 240 ரூ. யிலிருந்து 300 ரூபாயாகவும் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றனராம்.

பி. ஏ. முதலிய பட்டங்களைப்பெற அநேக ரூபாய்களை செலவழித்து விட்டு மாணவர்கள் திண்டாடுகின்றனர். விவசாயப் பள்ளிக்குப் போனால் அங்கும் இப்படித்தானா இருக்க வேண்டும். ஒரு கல்வியில் தேறுவதற்குள் கையிலிருக்கும் ஸர்வமும் கரைந்து மனிதன் ஓட்டாண்டியாய் விட வேண்டும் போலிருக்கிறதே!

ஆகாயத்திலுமா ஆபத்து?

கடல் மீதிலும், தரை மீதிலும் செல்லும் போக்கு வரத்து சாதனங்களுக்கு ஆபத்துகள் வருகிறதென்பதற்காகவே லார்டு வில்லிங்டன் கூட ஆகாய விமானத்தில் சஞ்சரித்து வருவதாகச் சிலர் சொல்லுவதில் உண்மையில்லாமலில்லை. இப்பொழுது ஆகாய விமானத்துக்கும் ஆபத்துக்கள் நேரிடுவதைப் பார்த்தால் இனி வருங்காலத்தில் எந்த இடத்தை விட்டும் நகரலாகாதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. டெல்லியை விட்டு கராச்சிக்குச் சென்று கொண்டிருந்த ஒரு ஆகாய விமானம் கேவலம் ஒரு கழுகினால் மோதப்பட்டு, விமானத்தின் இறக்கை ஒடிந்து தண்ணீரில்லாத ஒரு ஏரியில் விழுந்ததாம். ஏரியில் நிறைய தண்ணீர் இருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? ஆகவே ஆபத்து என்பது எங்கு மிருக்கிறது. ஆகாய விமானத்தின் மூலம் தப்பிவிடலாம் என்று சொல்லுவதற்கில்லை யல்லவா?

வந்தாரையா 'முத்தண்ணு !'

இந்தியாவுக்குள் நுழையும் போதே ரொம்ப கம்பீரமாகப் பேசிக் கொண்டு முத்தண்ணு ஷவுகத் ஆலி வருகின்றுர். வைஸ்ராயைப் பேட்டி கண்டு பேசுவாராம். பிறகு அநுமதி பெற்றுக் கொண்டு மகாத்மா காந்தியையும், பண்டித ஜவஹர்லாலேயும் கண்டு பேசுவாராம். இந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்த டாக்டர் அன்ஸாரி, இக்பால் முதலியவர்களோடும் பேசுவாராம். ஷவுகத் ஆலியின் ஆலோசனைகளெல்லாம் வெகு அழகா யிருக்கின்றன. ஆனல் அவ்வப்போது சகவாச தோஷத்தால் தலை தடுமாறி சில காரியங்கள் நடந்து விடுவதுண்டு. அந்த மாதிரி யின்றி இனிமேலாவது அவரை ஈன்ற வீரத் தாய் பீ அம்மனின் ஆன்மாவின் பேரால், தேச சேவையில் மீண்டும் இறங்குவாரென எதிர் பார்க்கின்ருேம்.

கோர்ட்டுகளும் காலியாகும்

கடன் கொடுத்தவர்கள் கடன் வாங்கினவர்களைக் கசக்கலாகாதென்பதற்காக சட்டங்கள் பல வரப்போகின்றன. சைகோனில் கடன் கொடுத்த செட்டிமார்களின் கதையை நாம் கேள்விப் பட்டிருக்கிருேம். இப்போது கடன் பட்டவர்களை சிறையில் போடலாமா கூடாதா என்ற விஷயமாக இந்திய துரைத்தனமும் ஆலோசனை செய்து வருகிறதாம். காலம் கெட்டுப் போய் விட்டது. நமது மாகாணத்தில் மந்திரி ஸ்தானம் வகித்தவர்கூட சமீபத்தில் இன்ஸால்வெண்டாகி விட்டாரென்ருல் வறுமையின் அளவுக்கு வேறு அத்தாட்சி வேண்டுமா ? "இந்தியாவில் உள்ள எல்லாப் பிராமசரி நோட்டுகளும், எல்லா அடமானப் பத்திரங்களும் இன்றைக்கோடு காலாவதியாகி விடுகின்றன" என்று சர்க்கார் கம்பீரமாக ஒரு சட்டம் செய்து விட்டால் தேவலை யென்று கடன் பட்டவர் ஒருவர் கூறுகின்றுர். அப்புறம் கோர்ட்டுகள் காலியாவதோடு லாயர்களுக்கும் வேலை யில்லாது போகுமே, என் செய்வது ?

ஸமாதிக்குள் தூங்குகிருன்

குறும்புப் பேச்சுக்கு ராஜாவான பெர்னுர்ட் ஷா அமெரிக்காவில் போய் இறங்கினர். அவரிடம் ஓர் பத்திரிகா நிருபர் அணுகி, "ஐயா உலகில் சந்தோஷம் மிகுந்த மனிதன் எங்கிருக்கிருன் ?" என்று கேட்டார். அப்போது ஷா, "சமாதிக்குள் படுத்துத் தூங்குகிருன்" என்று சொன்னாாம். உலகில் உயிரோடிருப்பவர் எவருக்குமே சந்தோஷ மில்லை யென்பது 'ஷா'வின் கருத்து. இந்தியாவில் முனிஸிபல் எலெக்ஷனில் வெற்றி பெற்றவுடன் வாண வேடிக்கைகளோடு சந்தோஷமாக ஊர்வலம் நடத்துபவர்களை 'ஷா' பார்த்ததில்லை போலும். சமாதிக்குள் இருப்பவனுக்குள்ள அத்தனை சந்தோஷமும் முனிஸிபல் எலெக்ஷனில் வெற்றி பெற்றவனுக்குண்டு என்பதை அவர் எப்படி அறிவார் ?

இந்தியாவில் பிரம்படி

"இந்தியாவில் சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமான குற்றங்களுக்கு 1932-ம் வருஷத்தில் 500 பேர்களுக்கு மேல் கசையடி தண்டனை கொடுக்கப்பட்டதாம். கசையடி என்பது பிரம்பினல் அடிப்பது என்றும், பெரும்பாலான சமயங்களில் கை மீது பிரம்படி கொடுக்கப் படுகிறதென்றும், காமன்ஸ் சபையில் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் கூறப்பட்டது. பிரம்படி கையில் கொடுக்கப் பட்டால் என்ன ? அல்லது முதுகில் கொடுக்கப்பட்டால் என்ன ? அடி வலிக்குமா, தித்திக்குமா, என்பதே கேள்வி. குற்றம் சாட்டித் தண்டனை விதிக்கப்பட்டதையே ஷை பதில் தெரிவிக்கிறது. கோர்ட்டு அநுமதி யின்றி தெருவில் நாயடிப்பதைப் போல அடித்து இழுத்து எறிகிருர்களே அது எந்தக் கணக்கிலாவது வந்திருக்கிறதா என்று ஏ! பட்லரே! உம்மைக் கேட்கின்ருேம்.

மதுரையில் வக்கீல் ஸ்ரீமான் ஏ. வைத்தியநாதய்யர் இன்னும் பலருடன் கிராமம் கிராமமாய்ச் சென்று ஹரிஜனச் சேரிகளைப் பார்வையிட்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்ருராம்.

கள்ளிக்கோட்டையில் 26-வது சர்வாதிகாரி ஸ்ரீயுத கிருஷ்ணன் குட்டி நாயருக்கு 18 மாதமும், மற்றும் ஏழு பேர்களுக்கு 9 மாதமும் கடுங்காவல் தண்டனை,

சட்ட மறுப்பு

மகாராஷ்டிர மாகாண காங்கிரஸ் சர்வாதி காரி ஸ்ரீமான் ஜோஷி சட்ட விரோதமான சங்கக் காரியங்களைக் கவனித்து வந்ததற்காக 2 வருஷம் கடுங்காவல் தண்டனையும் 150 ரூ. அபராதமும் விதிக்கப்பட்டார்.

கல்கத்தாவில் காங்கிரஸ் துண்டுப் பிரசுரமும் சைக்ளோஸ்டைல் மெஷினும் வைத்திருந்ததற்காக சுமாரு பாண்டே என்பவருக்கு 3 மாதக் கடுங்காவல் தண்டனை.

ஆமதாபாத்தில், மகாத்மாஜியின் சகாவும், சபர்மதி ஆசிரம வாசியுமான ஸ்ரீமான் நரஹரி பரேக் ஜில்லா மாஜிஸ்திரேட்டின் உத்திரவை மீறி கிராமத்தை விட்டு வெளியே சென்றதற்காகக் கைது செய்யப்பட்டார். பம்பாயில் ஸ்ரீமான் கபாடியாவின் வீட்டைப் போலீசார் சோதனை யிட்டு அன்று வெளியான காங்கிரஸ் புல்லட்டின், சைக்ளோஸ்டைல் மெஷின் முதலியவைகளைக் கைப்பற்றி கபாடியாவையும் கைது செய்தனர்.

எல்லூரில் ஸ்ரீமான்கள் தூர்க்கா பிரசாத் ராவ், சத்திய நாராயண ராவ் இருவரும் 'வீர பாரதி' என்ற துண்டுப் பிரசுரத்தை வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில், இருவருக்கும் தலா 5 மாதக் கடுங்காவலும், 100 ரூ. அபராதமும் விதிக்கப்பட்டது.

மதுரை காங்கிரஸ் கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட 10 பேர்களடங்கிய 5-வது கிராமப் பிரசார கோஷ்டி சோழவந்தானில் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டு மதுரையில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறது. கள்ளிக்கோட்டையில் கள்ளுக்கடை மறியல் செய்ததற்காக நால்வர் கைதியாயினர். காசி சர்வாதிகாரி ரிஷி நாராயண சர்மா மறியலை மேல் பார்வையிடும் போது கைதியானர்.

'பெஷாவர் தின'த்தை யொட்டி பம்பாயில் 7 பேர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அரசியல் அறிக்கைக்குத் தீ

நியோகாரிஜுன் பத்பானதாத் பஜாரில் 23வ அரசியல் திருத்த அறிக்கைக்குத் தீ வைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் மூவருக்கு 4 மாத கடுங்காவலும், இருவருக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

கல்கத்தாவில் சோதனை

கல்கத்தாவில் "பாரடைஸ் ஹோட்டலை"ச் சோதனையிட்டு ஆனந்த குமார் பட்டாச்சாரியைப் போலீசார் கைது செய்தனர். மற்றொரு இடத்தில் நேபாள சந்திர ராய் என்பவரையும் கைது செய்தனர். பாரா பஸாரில் ஒருவரின் வீட்டை போலீசார் சோதனையிட்டு துண்டுப் பிரசுரங்களையும் சைக்ளோஸ்டைல் மெஷினையும் கைப்பற்றி, வீட்டுக்காரரையும் கைது செய்தனர். பாரிஸாலிலும் வீடுகள் சோதனை செய்யப்பட்டதில் ஒன்றும் அகப்படவில்லை.

பம்பாய் ரகஸியப் போலீஸாரால் மத்துங்கா, கிர்காம், நல்பஸார் ஆகிய விடங்களில் மூன்று வீடுகள் சோதனை யிடப்பட்டதில் 1500 காங்கிரஸ் புல்லட்டின்கள் கைப்பற்றப் பட்டனவாம்.

பம்பாயில் பண்டரிநாத கனேச கதேகார் என்பவர் கார் என்னுமிடத்தில் கைது செய்யப்பட்டார். அவரது வீடு போலீஸாரால் சோதனை யிடப்பட்டபோது சைக்ளோஸ்டைல் மெஷினும், புல்லட்டின் தயாரிப்பதற்கான கருவிகளும் கிடைத்ததாம்.

சிட்டகாங் ஜில்லா சூலியாபாரா வென்னும் கிராமத்தில் உள்ளவர்களுக்கு 300 ரூ. அபராதம். ஆயுதச் சாலைக் கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டு, தலை மறைவாக விருக்கும் ஐவரைப் பிடிப்பதற்கு உளவு சொன்னால் ஷை அபராதம் வசூலிக்கப்பட மாட்டாதாம். இல்லாவிட்டால் மே மாதம் 2ம் தேதியிலிருந்து ஷை அபராதம் வசூலிக்கப்படுமென்று ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. ஷை கொள்ளை வழக்கில் தலை மறைவாக விருந்த ஒருவருக்கு இடம் கொடுத்துதவியதாக குற்றஞ் சாட்டப்பட்டு ஒருவருக்கு 6 மாதமும், 50 ரூ. அபராதமும், இன்னொருவருக்கு 2 வருஷமும் கடுங்காவல்.

ஸ்ரீமான் பஜாஜ்

ஸ்ரீயுத ஜம்னலால் பஜாஜ் காது நோயின் காரணமாக டாக்டர்களின் ஆலோசனையின் பேரில் இமயமலையில் உள்ள அல்மோராவுக்குப் போகப் போவதாகத் தெரிகிறது.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.